www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## HALF YEARLY EXAMINATIONS AND LANGUAGE TESTS – OCTOBER - 2023

## FIRST CLASS LANGUAGE TEST IN TAMIL PART – II

## PAPER I – ESSAY

## (FOR I.A.S., I.P.S. and I.F.S. OFFICERS)

Maximum Marks : 100

Time : 3 Hours

1. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு 20 வரிகளில் விடை எழுதுக : (1 × 20 = 20)

   (அ) உழவுத் தொழிலே உணவின் ஆதாரம்.

   (ஆ) பண்பாட்டு சின்னங்களும், பாதுகாப்பு முறைகளும்.

   (இ) தகவல் தொழில் நுட்பங்களின் ஆற்றல்.

2. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு 20 வரிகளில் விடை எழுதுக : (1 × 20 = 20)

   (அ) காட்டு வளமே நாட்டு வளம்.

   (ஆ) காவல்துறை உங்கள் நண்பன்.

   (இ) இயற்கையும், பாதுகாப்பு முறைகளும்.

3. கீழ்காணும் சொற்களில் எவையேனும் ஐந்திற்கு மட்டும் வாக்கியத்தில் அமைத்து விடையளிக்க : (5 × 3 = 15)

| | | | |
|---|---|---|---|
| 1. தனிச்சிறப்பு | 6. ஆய்வு | 11. மாநிலம் | 16. சில்லறை |
| 2. நாள்தோறும் | 7. உற்பத்தி | 12. கடல் | 17. கப்பல் |
| 3. தொழிற்சாலை | 8. வகுப்பு | 13. பண்டங்கள் | 18. ஆலோசனை |
| 4. நுண்ணறிவு | 9. உயர்கல்வி | 14. வணிகம் | 19. பாதுகாக்க |
| 5. செயற்கை | 10. சீருடை | 15. ஏற்றுமதி | 20. ஆடம்பரம் |

[Turn over

www.prepp.in

4. கீழ்காணும் மரபுத் தொடர்களில் எவையேனும் ஐந்திற்கு மட்டும் வாக்கியத்தில் அமைத்து விடையளிக்க : (5 × 3 = 15)

1. முதலைக் கண்ணீர்
2. குரங்குப்பிடி
3. கயிறு திரித்தல்
4. ஓலைக் கிழிந்தது
5. நீர் மேல் எழுத்து
6. காலை வாரி விடுகிறது
7. பஞ்சாய் பறத்தல்
8. அவசரக் குடுக்கை
9. ஆகாயத்தாமரை
10. தலையில் வைத்துக் கொண்டாடுதல்
11. பித்தலாட்டம்
12. மதில் மேல் பூனை
13. தோலிருக்கச் சுளை விழுங்கி
14. வாழையடி வாழையாக
15. புத்தகப்பூச்சி
16. கானல் நீர்
17. இமாலயத்தவறு
18. கரையேறுதல்
19. பற்றுக்கோடு
20. கொடிக்கட்டி

5. பின்வரும் இலக்கண வினாக்களில் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி : (5 × 3 = 15)

(1) குறில் எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) பட்டினபாலை

(ஆ) ஏற்றுமதி

(இ) காசோலை

(ஈ) தமிழ்ச்சொல்

(உ) வணிகம்

(ஊ) நேர்மை

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(2) நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள் **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) சிறுவன்

(ஆ) ஊர்தோறும்

(இ) இதுதான்

(ஈ) நூலகம்

(உ) வகுப்பு

(ஊ) காமராசர்

(3) சுட்டெழுத்தில் தொடங்கும் சொற்கள் **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) மலர்க்கொடி

(ஆ) அவ்வானம்

(இ) திருக்குறள்

(ஈ) இவர்

(உ) திரிபு

(ஊ) அம்மரம்

(4) சுட்டுப் பெயர் சொற்கள் அமைந்த தொடர்கள் **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) மருத்துவமனையில் கூட்டம் அலைமோதுகிறது.

(ஆ) அந்த பொருள் கிடைக்கவில்லை.

(இ) பொன்னன் முன்னேறினான்.

(ஈ) இந்த பள்ளிக்கூடம் செயல்படுகிறது.

(உ) விற்பனைப் பொருள் நிலையம்.

(ஊ) அந்த மருத்துவமனையில் வசதிகள் குறைவு.

Prepp
Your Personal Exams Guide

(5) வினாச் சொற்களைக் கண்டறிந்து **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) என்னுடையது

(ஆ) எது

(இ) மொழி

(ஈ) யார்

(உ) கதிர்ச்சுடர்

(ஊ) ஏன்

(6) வினாச்சொற்கள் அமைந்த தொடர்கள் **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) ஆயத்த ஆடைகள் பகுதி எங்குள்ளது ?

(ஆ) நூலகத்தில் புத்தகம் உள்ளது.

(இ) இயற்கையை பாதுகாப்போம்.

(ஈ) அந்த மாணவன் ஏன் வரவில்லை ?

(உ) செழியன் துணிக்கடைக்குச் சென்றான்.

(ஊ) யாருக்கு வலிமை இல்லை ?

(7) திணை சரியாக அமையும்படி பொருத்துக :

(அ) மன்னர் – வந்தது

(ஆ) பூனை – வந்தனர்

(இ) மக்கள் – வந்தார்

(8) பால் சரியாக அமையும்படி பொருத்துக :

(அ) மதியழகன் – நடந்தாள்

(ஆ) கயல்விழி – நடந்தது

(இ) சிங்கம் – நடந்தான்

(ஈ) யானைகள் – நடந்தனர்

(உ) சான்றோர்கள் – நடந்தன

www.prepp.in
Prepp Your Personal Exams Guide

(9) இடம் சரியாக அமையும்படி பொருத்துக :

(அ) அவள் – வந்தேன்

(ஆ) நான் – செய்தாள்

(இ) நீ – பேசினாய்

(10) பன்மைச் சொற்களைக் கண்டறிந்து **மூன்றினைத்** தேர்ந்தெடுத்து எழுதுக :

(அ) விவசாயி

(ஆ) பெண்

(இ) மாணவர்கள்

(ஈ) யானை

(உ) தொழிலாளர்கள்

(ஊ) அதிகாரிகள்

**6. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் குறிக்குள் உள்ளவாறு விடை தருக :** **(5 × 3 = 15)**

(1) (அ) கதிர்ச்சுடர் (பிரித்து எழுதுக)

(ஆ) மூச்சடக்கி (பிரித்து எழுதுக)

(2) (அ) அடிக்கும் + அலை (சேர்த்து எழுதுக)

(ஆ) பெருமை + வானம் (சேர்த்து எழுதுக)

(3) (அ) பண் (பொருள் தருக)

(ஆ) இழைத்து (பொருள் தருக)

(4) (பொருள் வேறுபாடு அறிக) :

வானம் – வாணம்.

(5) (பொருத்தமான பெயர்ச்சொல்லை எழுதுக) :

_______________ கிடைத்தது.

[Turn over

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(6) நேற்று என் தாய் பாடம் ____________

(சொல்லிக்கொடுத்தாள், சொல்லிக்கொடுப்பாள்)

(7) (எதிர்ச்சொல் தருக) :

(அ) எளிது

(ஆ) நீக்குதல்

(8) என் வீட்டுத்தோட்டத்தில் மலர்கள் ____________ வீசின. (மனம், மணம்)

(9) அருளப்பர் ____________ (வந்தார், வந்தது)

(10) (அகர, முதலி வரிசையில் எழுதுக)

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

www.prepp.in

www.prepp.in